

மறைந்த நீடாமங்கலம் பேரூர் செயலாளர் ஆர்.ராஜசேகரன் அவர்களின் உடலுக்கு கழக முதன்மை செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் கோவி.செழியன், முரசொலி எம்.பி., மாவட்ட செயலாளர்கள் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், சோம. செந்தமிழ் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு,ஆர்.ராமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி, காமராஜர் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திட்டத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஆவடி மாநகர ஆணையர் சரண்யா, சுகாதாரத்துறை இணை ஆணையர் அம்பிகா,பிரியா, பிரபாகரன், சரஸ்வதி, பகுதி செயலாளர்கள் ராஜேந்திரன், பொன் விஜயன், ஜோதி லட்சுமி நாராயண பிரசாத், விமல் வர்ஷன், வழக்கறிஞர் வினோத் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் உள்ளனர்.

### சிறப்பான ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்து

# அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!



சென்னை, ஜன. 4-

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் 20 ஆண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களையும் வழங்கக் கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" செயல்படுத்திடத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுஇதுபிறப்பித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

ஓய்வூதியத்தை வழங்குவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையை ஏற்று சிறப்புமிக்க அறிவிப்பை முதல்வர் வழங்கி இருக்கிறார்.

புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக் காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும்அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்த பட்ச ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு ஊழியர்களின் மீது அரசு எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறது என்பதைப் பறைசாற்றுகிறது.

தற்போது தமிழ்நாடு அரசு சந்தித்து வரும் கடுமையான நிதிச் சூழலிலும், அரசுஅலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக்காத்திடும் பொருட்டு இந்த அறிவிப்பை வெளியிட்டு இருப்பது தமிழ்நாட்டு அரசு ஊழியர்கள் மீது தமிழ்நாடு முதல்வர் வைத்திருக்கும் பேரன்பை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஓய்வூதியத் திட்டத்திற்காகத் தொடர்ந்து போராடி வந்த ஜாக்டோ ஜியோ அமைப்பினரும் முதல்வரின் இந்த அறிவிப்பை வரவேற்று இருக்கின்றனர். அவர்கள் அறிவித்திருந்த போராட்டத்தையும் திரும்பப் பெற்று இருக்கின்றனர். அரசு ஊழியர்களின் நலனின் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.எச்.ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

### பி.கே.ஏ. சத்திய பிரபு ஏற்பாடு! வே.கருணாநிதி வரவேற்புரை! கோல்டு டி.பிரகாஷ் – எல்.பிரபு முன்னிலை!

# தாம்பரம் மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் துணை முதல்வர் பிறந்த நாள் நல உதவிகள் - உணவு!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்! டி.ஆர்.பாலு எம்.பி. - மீ.அ.வைத்தியலிங்கம் - இ. கருணாநிதி - எஸ். ஆர்.ராஜா பங்கேற்பு!

தாம்பரம், ஜன.4

தாம்பரம் மாநகர தி.மு.க. இளைஞர் அணி சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இளைஞர்ளுக்கு தலைகவசம் மகளிருக்கு குக்கர் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (04.01.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 05.00 மணிக்கு எஸ்.எஸ். மஹால் - பம்மலில் தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்திய பிரபு ஏற்பாட்டில் நடைபெறுகிறது.பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே. கருணாநிதி வரவேற்புரையாற்றுகிறார். காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்ட் டி. பிரகாஷ், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல். பிரபு ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு நல்ல உதவிகள் வழங்குகிறார்.

இதில் டி.ஆர்.பாலு எம்.பி., தலைமை தீர்மானக் குழுச் செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், இ கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ காமராஜ், அ. தமிழ் மாறன், முகமது ரபி, ஈ ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயக்குமார், இரா. நரேஷ் கண்ணா, எஸ். சதீஷ், வி. ரவிச்சந்திரன், பம்மல் வீ. தினேஷ், எஸ். சேகர், எஸ். இந்திரன், டி. காமராஜ், ஆர். நடராஜ், ஏ.கே. கருணாகரன், இ.எஸ். பெர்னார்ட் , ஆர் சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றியநகரபேரூர்நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

பம்மல் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் செ. அமிர்தராஜ் நன்றி கூறுகிறார்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் மடிக்கணினி வழங்கும் திட்டத் தொடக்க விழா!

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினருக்கு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஜன. 4-

ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்ட தொடக்க விழா நாளை (5.1.2026 திங்கட்கிழமை) மாலை 3 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தரும் முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள்(BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.

### சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமை! முன்னிலை நந்தனம் கி.மதி – கோவி. லெனின்!

# 121 'அ' வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா! உணவு - நல உதவிகள்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன.4-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121 அ வட்ட கழகத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 பொதுமக்களுக்கு அறுசுவை உணவுடன் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (04.01.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட லாயிட்ஸ் சாலை, டாக்டர் நடேசன் சாலை சந்திப்பில், வட்ட கழகச் செயலாளர் சீ.கிருஷ்ண மூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம் சி, கோவி லெனின் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் விழாவில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மயிலை த வேலு அவர்கள் 1000 பொதுமக்களுக்கு அறுசுவை உணவுடன் நல திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இவ்விழாவில் வட்டக் கழகத்திற்குட்பட்ட, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக அணிகளின் நிர்வாகிகள், BLA2 / BLC நிர்வாகிகள், வட்ட கழக முன்னோடிகள், உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

### சென்னை தென்மேற்கு மாவட்டம்

# தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி கிழக்கு - மேற்கு பகுதி சார்பில் திராவிட பொங்கல் விழா நிகழ்ச்சிகள்!

## பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை எம்.சி. அறிவிப்பு!

### தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி கிழக்கு - மேற்கு பகுதி

| வட்டம் | நாள் | நேரம் | தலைமை | இடம் |
|---|---|---|---|---|
| 135 | 06.01.2026 | மாலை 6 மணி | ஆர்.லோகு | பிரியதர்ஷினி மஹால் |
| 131 | 06.01.2026 | மாலை7 மணி | மு.ம.செந்தில் குமார் | 131 வது வார்டு மாநகராட்சி அலுவலகம் |
| 130 | 07.01.2026 | மாலை 6 மணி | டி.கமல் | ஆர்த்தி மஹால் |
| 130(அ) | 07.01.2026 | மாலை 7மணி | தட்சன் ஹரிஹரன் | செங்குந்தர் திருமண மண்டபம் |
| 135(அ) | 08.01.2026 | மாலை 6 மணி | மு.செல்வகுமார் | எம் கே பி மஹால் |
| 131(அ) | 08.01.2026 | மாலை 7மணி | எம்.கே.மூர்த்தி | கருணீகர் திருமண மண்டபம் |
| 134(அ) | 09.01.2026 | மாலை 6 மணி | ஜி.பி.செந்தில் குமரன் | சந்திரசேகர் மினி ஹால் |
| 132 | 09.01.2026 | மாலை 7மணி | ந.மோ.முரளி | அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் |
| 141 | 10.01.2026 | மாலை 6 மணி | என்.துரை | ஆதித் ஹால் |
| 141(அ) | 10.01.2026 | மாலை 7மணி | எஸ்.லட்சுமிகாந்தன் | எம்.ஜே மினி ஹால் |
| 134 | 11.01.2026 | காலை 10 மணி | எம்.சக்திவேல் | ஷோபனா திருமண மண்டபம் |
| 132(அ) | 11.01.2026 | காலை 11 மணி | கே.எஸ்.வெல்டிங் ராஜா | 132 வது வார்டு மாநகராட்சி அலுவலகம் |
| 133&133(அ) | 12.01.2026 | மாலை 6 மணி | பி.மாரி & ஜெயக்குமார் | சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கம் |

### தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி கிழக்கு - மேற்கு பகுதி சார்பில் திராவிட பொங்கல் விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகள்

| வ எண் | தேதி | விளையாட்டுப் போட்டிகள் | இடம் |
|---|---|---|---|
| 1. | 10.01.2026 | கபடி | 9TH அவென்யூ, மாந்தோப்பு காலனி, அசோக் நகர். |
| 2. | 10.01.2026 | கேரம் | SIMS மருத்துவமனை அருகில் ( மாநகராட்சி விளையாட்டு திடல்.) |
| 3. | 10.01.2026 | கிரிக்கெட் | சோமசுந்தரம் விளையாட்டு மைதானம், தி.நகர். |
| 4. | 11.01.2026 | கிரிக்கெட் | சோமசுந்தரம் விளையாட்டு மைதானம், தி.நகர். |
| 5. | 11.01.2026 | கால்பந்து | காமராஜர் காலனி விளையாட்டு மைதானம், கோடம்பாக்கம். |
| 6. | 15.01.2026 | சிலம்பம் | CIT நகர் ,4 வது பிரதான சாலை, சென்னை மாநகராட்சி விளையாட்டு திடல். |

ஜனவரி-14 பகுதி கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கோலப்போட்டிகள் சமத்துவ பொங்கல் திருவிழா நடைபெறும்.

மேற்கண்ட பொங்கல் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட செயலாளர் மயிலை. தா.வேலு, பகுதி செயலாளர் கே.ஏழுமலை, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி மற்றும் தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் அனைத்து அணிகளை சேர்ந்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.**
செயலாளர் - தியாகராயர் நகர் கிழக்கு பகுதி தி.மு.க.

**கே.ஏழுமலை எம்.சி.**
செயலாளர் - தியாகராயர் நகர் மேற்கு பகுதி தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 318 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை, ஜன. 04-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 318 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.01.2026), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 94, சிட்கோ நகர், வில்லிவாக்கம், 2) வட்டம் 94 அ, பாலியம்மன் கோயில் தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம்.சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர். தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு, K.S.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம. அசோக்குமார், எல். சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




மதுரவாயல் வடக்குப் பகுதி, 147வது வட்டத்தில் ”என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி என்ற தலைப்பில் 239 வது பாக முகவர்கள் கூட்டம் வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி. மாதவன் தலைமையில் மண்டலக் குழுத் தலைவர், பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமைக் கழக சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி கல்விக் குழு உறுப்பினர் ரமணி மாதவன், எஸ்.எம். பாலாஜி, ஜி.பி.ஆனந்தகுமார், தமயந்தி, இளங்கோவன், க.பிருந்தாவனம், ஜி.குப்புசாமி, BLA 2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி திருப்போரூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் பையனூர் எம். சேகர் தலைமையில் பாகம் எண் 189க்கு உட்பட்ட தண்டரை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை பங்கேற்று சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பாக ஒருங்கிணைப்பாளர் ஓ.ஜே. மதுரை வேல் மாவட்ட கவுன்சிலர் டி.ஜெயச்சந்திரன், திருமலை, ராமகிருஷ்ணன், ஜி.கோபிநாத், கே.செல்வம், பாஸ்கர், லோகநாதன், சசிகலா, ரேவதி, நெல்சன், சின்னையா, ஜெயச்சந்திரன், ஏழுமலை, செல்வராஜ், வெங்கடேசன், துரை, கண்ணன், சுந்தர், குமார், கே.துரை, கடம்பாடி லிங்கேஸ், கோபால், சந்திரா, உஷா, கலைச்செல்வி, வசந்தி, சுந்தரி, லோகேஸ்வரன், நந்தகோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான மகளிர் கலந்து கொண்டனர்.